# பிறருக்கு உதவுதல்

## நல்ல சமாரியன் ஓர் அந்நியனுக்கு உதவினான்

**ஜெபம்:** “எங்கள் பிதாவே, தேவையோடு இருக்கும் எங்கள் அயலகத்தாரிடம் பிரயோஜனமான முறையில் அன்புகாட்ட உதவும்.”

சிறுவர்களின் பின்னணி மற்றும் அந்தந்தப் பகுதி பழக்கவழக்கங்களுக்குப் பொருத்தமான நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க. நாம் அறியாதவர்களும் விரும்பாதவர்களுமாக இருந்தாலும் மக்களை எவ்வாறு நடத்த வேண்டும் என்ற தேவன் எதிர்பார்க்கிறார் என்பதை லூக் 10:25-37 ல் காண்க.

- ஒரு பெரியபிள்ளை அல்லது ஆசிரியர் நல்ல சமாரியன் கதையைக் கூறவும் (லூக் 10:25-37).
- காயம்பட்டவன் ஒரு யூதன். அவன் மேல் உண்மை அன்பு காட்டியவனோ ஒரு சமாரியன். வேறு குலம். யூதர்களும் சமாரியர்களும் ஒரே பொதுவான பகுதியில் வாழ்ந்தாலும் அவர்கள் விரோதிகள்.



- குழந்தைகளிடம் கேட்க வேண்டிய கேள்விகள்:

1. சமாரியன் வருவதற்கு முன் எத்தனை பேர் காயம்பட்ட மனிதனைக் கடந்து போனார்கள்?
2. ஆசாரியனும் லேவியனும் மதவாதிகள். அந்த மனிதனின் இனத்தை சார்ந்தவர்கள். அவர்கள் ஏன் நின்று அவனுக்கு உதவி செய்யவில்லை என்று எண்ணுகிறீர்கள்?
3. சமாரியன் வேறு இனத்தவன். காயம்பட்ட மனிதனின் இனத்தோடு சண்டை போடும் இனம். அவன் காயம்பட்டவனுக்காக எவ்வாறு உணர்ந்தான்?
4. சமாரியன் அவனுக்கு என்ன செய்தான்?
5. இந்தக் கதையில் யாருடைய உதாரணத்தை நாம் பின்பற்ற வேண்டும் என்று இயேசு கூறினார்?

## நாடகமாக்குக

லூக். 10:25-37 ல் உள்ள கதையை நாடகமாக்குக. ஒத்திகை பார்த்து ஆராதனை வேளையில் பெரியோருக்கு நடத்திக் காட்டவும். கதையை அப்படியே நடிக்கவும். உதவிக்கு சில பெரியவர்களிடம் கேட்கலாம்.

- சிறிய பிள்ளைகள் நடிக்க வேண்டிய பாத்திரங்கள்: கொள்ளைக்காரர்கள், காயம்பட்ட யூதன், ஆசாரியன், லேவியன். உரையாடல் இல்லை. பேச்சில்லாமல் நடிக்கவும்.
- இறுதியில் சமாரியன் சத்திரக்காரனிடம் கூறுவதே ஒரே பேச்சு, “இவனை கவனித்துக் கொள். நீ அதிகமாக செலவு செய்வதை வரும்போது தருவேன்.” பேச்சில்லாமல் சைகை மூலமாகவும் இவனை நடிக்க வைக்கலாம்.
- ஒத்திகையின் போது கதையை வாசித்து, அதுபோல நடிகர்களை நடிக்க வைக்கவும். பேச்சில்லாமல் நடிக்கும்போது முகத்திலும் அசைவிலும் உணர்ச்சிகளை வெளிப்படுத்த வேண்டும்.

- இரண்டு பெரிய பிள்ளைகள் அல்லது பெரியவர்கள் கழுதையாகவும், நல்ல சமாரியனாகவும் நடிக்கட்டும். ஒரு போர்வையில் மூடி, குனிந்து கழுதையாக நடிக்கலாம். பழைய கந்தை அல்லது துணியால் வாலும், அட்டையில் கழுதையின் முகமும் தயாரிக்கலாம். அவ்வப்போது கழுதை போல கனைக்கட்டும்.



- நீங்கள் வழங்கும் நாடகத்தின் கதையை முதலில் கூறக் கூடாது. அது என்னவென்று பெரியவர்களே யூகிக்கட்டும்.

ஒரு கழுதையின் படத்தை வரைக. ஒவ்வொருவரின் பாரத்தையும் பிரச்சினைகளையும் நாம் தாங்க வேண்டும் என்பதை அது சித்தரிக்கிறது.

சங்கீதம். மூன்று சிறுவர்கள் சங் 41:1-3 ஐ ஒப்புவிக்கட்டும்.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன்
பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர்
அவனை விடுவிப்பார்
கர்த்தர் அவனைப் பாதுகாத்து அவனை உயிரோடே வைப்பார்.
பூமியில் அவன் பாக்கியவானாய் இருப்பான்.
அவன் சத்துருக்களின் இஷ்டத்துக்கு நீர் அவனை ஒப்புக்கொடீர்.
படுக்கையின் மேல் வியாதியாய்க் கிடக்கிற அவனைக் கர்த்தர் தாங்குவார்.
அவனடைய வியாதியிலே அவன் படுக்கை முழுவதையும் மாற்றிப் போடுவீர்.

## செய்துவிளக்குதல் (Demonstration)



- ஒரு மெழுகுவர்த்தியைக் கொளுத்தி மேசை மேல் வைக்கவும்
- ஒரு கூடை அல்லது பெட்டியை அதன் மேல் கவிழ்த்தி வெளிச்சத்தை மறைக்கவும். எளிதில் தீப்பிடிக்கும் எதையும் கவிழ்த்தக் கூடாது.
- மத்தேயு 5:14-16 ஐ வாசித்து மூடி இருப்பதை விலக்கவும். தேவன் மேல் உள்ள உண்மை அன்பு இல்லாதோருக்கு சேவை செய்ய நம்மைத் தூண்டுகிறது என்பதை விளக்கவும்.

**மனன வசனம்:** மத். 5:16.

**ஜெபம்:** "பிதாவே, எங்களைச் சுற்றி இருக்கும் மக்களின் தேவையை உணர எங்களுக்கு உதவும். அவர்கள் தெரிந்தவர்களாக அல்லது தெரியாதவர்களாக இருந்தாலும் உடனடியாக உதவி செய்ய உதவி செய்யும்.

எங்கள் அன்பை பயனுள்ள வகையில் காட்ட உதவுவீராக.

நண்பர்களாக இல்லாவிட்டாலும், ஏன், பகைவர்களாக இருந்தாலும் அவர்கள் மேல் அன்பு கூர உதவி செய்யும்.

இயேசுவின் நாமத்தினால் ஆமென்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net